முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் - 157/2021

பிரதிவாதி தரப்பு சாட்சி-1 ராஜா - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 20.08.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>:

1) வாதிகள் எனக்கு கடந்த 12.07.2021 ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் ஆமாம். அதை நான் பெற்றுக்கொண்டேனா என்றால் பெற்றுக்கொண்டேன். அதற்கு பதிவு அறிவிப்பு கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். எனது பதிலுரையில் வாதிகள் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பின்னிட்டு வாதிகளின் தவறான செய்கையிலும், பொறாமை குணம் மற்றும் தீய எண்ணங்கள் குறித்து குளித்தலை அவர்களும் விசாரணை செய்ததில் 1ம் வாதி சர்வே எண் 272/1B பொது பாதையில் சிமென்ட் சாலை அமைப்பதை பொறுத்து எவ்வித இடையூறு மற்றும் ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று கையொப்பம் இட்டு உறுதி கூறியுள்ளார். இதனால் பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அவசியம் இல்லை என் கருதி விட்டுவிட்டார்கள் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் கடந்த 19.07.2023 ம் தேதி எனது வழக்கறிஞர் மூலமாக அனுப்பிய அறிவிப்புதான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். **அது வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி அறிவிப்பு குறித்து எனது பதிலுரையில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.13 அறிவிப்பில் வாதிகள் ரூ.43,00,000/- நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று கேட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2) வாதிகள் எதிர் வழக்குரையில் சொன்னதுபோல் வட்டாட்சியரிடம் ரோடு போடுவதற்கு சம்மத கடிதம் எழுதிக் கொடுத்தார்கள் என்று கூறியிருக்கிறேன் என்றால் இல்லை, அது முழு பொய். வாதிகள் சம்மத கடிதம் கொடுத்த பின்னிட்டுதான் 16 அதிகாரிகள் பார்வையிட்டு சாலை அமைக்க உத்தரவு கொடுத்தார்கள். அந்த உத்தரவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஒவ்வொரு அதிகாரியிடமும் தனித்தனியாக உத்தரவு வாங்க முடியாது. மேற்படி வருவாய் அலுவலர்கள் அனைத்து ஆவணங்களையும் பார்வையிட்டு, ஆவணங்கள் சரியாக இருந்ததால் உத்தரவு தேவையில்லை, ரோடு போடுங்கள் என்று கூறிவிட்டார்கள். பட்டாதாரர் நிலத்தில் அவரது அனுமதி இல்லாமல் அரசோ, தனி நபரோ பாதை அமைக்க முடியாது என்றால், பட்டாதாரர் கிருஷ்ணா ரெட்டியார் ஆவார். அவர் ஊர் பொதுமக்கள் முன்பாக சம்மத பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். கிருஷ்ணா ரெட்டியார் எழுதிக் கொடுத்த சம்மத பத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

எனக்கு தெரியவில்லை. சம்மத பத்திரம் அசல் என்னிடம் உள்ளது. சம்மத பத்திரம் என நான் சொல்வது நானாக தயார் செய்தது என்று என்மீது குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல.

3) வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலத்தில் நானும் மற்ற பிரதிவாதிகளும் சேர்ந்து சட்டவிரோதமாக இரவு நேரத்தில் சிமெண்ட் சாலை அமைத்ததாலும், அரசு அதற்கு அனுமதி வழங்காததாலும், இதுவரை மேற்படி சாலை அமைத்ததற்கு பணம் எதுவும் அரசால் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல, இரவு நேரத்தில் சாலை அமைக்கவில்லை, வாதிகள் அறிவிப்பு அனுப்பியதால் அரசாங்கம் எங்களுக்கு பணம் கொடுப்பதை நிறுத்தி வைத்துள்ளார்கள். நானும், பால்ராஜ் என்பவரும் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.7 ல் தகவல் அறியும் உரிமை சட்டத்தில், தகவல்கள் 7 ல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பிரிவில் இது தொடர்பாக ஆவணங்கள் எதுவும் இல்லை என கண்டுள்ளது என்றால் அது அனைத்தும் பொய்யாகும். எனக்கோ, 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கோ தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், நாங்கள் வேண்டுமென்றே வாதியின் சுவாதீனத்தில் இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. எங்களை மிரட்டி வாதிகள் பணம் கேட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனவே வாதிகள் கோரியபடி செலவுத்தொகையுடன் தாவா தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

Principal District Munsif,

Kulithalai.